**அக்டோபர்: 09**

## யூதாஸ்காரியோத்துவிற்கும், பேதுருவுக்கும் என்ன நடந்தது.?

யூதாஸ்காரியோத்து: வாசிக்க: மத்தேயு 27:5
சகல பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும், இயேசுவைக் கொலைசெய்யும்படி, அவருக்கு விரோதமாக ஆலோசனைபண்ணி, அப்பொழுது, அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து: குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள். அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான்.
பேதுரு: வாசிக்க: மாற்கு 16:1-7
ஆண்டவர் மரித்து கல்லறையில் வைத்த மூன்றாம்நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது அவருடன் இருந்த ஸ்திரீகளில் சிலர் கல்லறையினிடத்தில் வந்து. அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது, அவர்கள் ஏறிட்டுப்பார்க்கிறபோது, அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள். அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து, வெள்ளையங்கி தரித்தவனாய் வலது பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபனைக் கண்டு பயந்தார்கள். அவன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் உயிர்த்தெழுந்தார்: அவர் இங்கேயில்லை: இதோ, அவரை வைத்த இடம். நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய், உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், அவர் உங்களுக்குச் சொன்னபடியே அங்கே அவரைக் காண்பீர்கள் என்று, அவர்களுக்குச் சொல்லுங்கள் என்றான்.




மழலை செல்லங்களா, யூதாஸ், பேதுரு எப்படி விழுந்தார்கள் என்று நேற்று பார்த்தோம். பின்பு அவர்களுக்கு என்ன ஆனது என்பதையே இன்று தியானிக்க போகிறோம். யூதாஸ் இயேசப்பாவை காட்டிகொடுத்த போது, பண ஆசையினால் அவர் வார்த்தைகளை முழுமையாக நம்பமுடியவில்லை. ஆகவே காட்டிகொடுத்தான். ஆனால் அவரை கொல்ல திட்டமிடுகிறார்கள் என தெரிந்தவுடன், அவனும் ஆண்டவரை அதிகமாக நேசித்ததால் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்டு செத்தான். ஆனால் அவனை போலவே இயேசப்பாவை மறுதலித்த பேதுரு மனமுடைந்து அழுதபோது, ஆண்டவர் அவனுக்கு மன்னிப்பை குறித்து சொன்ன வார்த்தைகளை நினைத்தான். உடனே ஓடிபோய் மற்ற சீஷர்களுடன் இணைந்து கொண்டான். ஆகவே தான் அந்த தேவதூதன் பேதுருவிடம் குறிப்பாக உயிர்த்தெழுந்ததை சொல்ல சொன்னான். யூதாஸ் பேதுருவை ஒப்பிட்டு பார்த்தால், இருவரும் ஆண்டவரை நேசித்தனர், ஆனால் யூதாஸ் அவர் வார்த்தைகளை கேட்டானே தவிர நம்பவில்லை. பேதுரு சரியான நேரத்தில் அவருடைய வார்த்தையை பற்றிக் கொண்டான். என்னருமை செல்லகுட்டிங்களா தேவனுடைய வார்த்தைகளை நம்பி வாழ அர்பணிப்பீர்களா.?

நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. யோவான் 6:63

## ஜெபம்

பரிசுத்தமுள்ள எங்கள் தகப்பனே, ஒன்றுமில்லாமையிலிருந்து சகலத்தையும் உம் வார்த்தையினாலே படைத்தீரே. அந்த வார்த்தைகளை நம்பி வாழ கிருபை தாங்கப்பா. இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

